தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 8, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 மார்ச் 22, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு.”

ஆற்றல்மிகு படை, அறிவார்ந்த குடிமக்கள், குறையாவளம், குறையற்ற அமைச்சு, முரிபடாத நட்பு, மோதியழிக்க முடியாத அரண் ஆகிய ஆறு சிறப்புகளும் உடையதே அரசுகளுக்கிடையே ஆண் சிங்கம் போன்ற அரசாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

31—

புதிய வருவாய் வட்டம்

***2752—திரு. G.V. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் வருவாய் வட்டத்தைப் பிரித்து புதூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வருவாய் வட்டத்தைப் பிரித்து புதூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில், மக்கள்தொகை அளவுகோல் பூர்த்தியாகாததால், புதூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த வகுத்தலும்' என்று சொல்வதைப்போல் இதைப்போன்று யாராலும் செய்ய முடியாது என்ற அளவில் ஒரு சிறந்த நல்லாட்சியை நடத்திக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், இந்த அவையை சிறப்பாக வழி நடத்திக்கொண்டிருக்கிற அவை முன்னவர் அவர்களுக்கும், எங்களையெல்லாம் இந்த இடத்திற்கு மீண்டும் வரவழைத்திருக்கிற எங்கள் இயக்கத்தினுடைய இளைஞர் அணிச் செயலாளர், இளம் சூரியன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், இந்த அவையில் இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் சிரம் தாழ்ந்த என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தூத்துக்குடி மாவட்டத்தில் 10 வருவாய் வட்டங்கள் இருக்கின்றன. விளாத்திகுளம் வட்டம் என்பது, 89 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். ஆனால், தூத்துக்குடி மாவட்டத்தில், 10 வட்டங்களிலும் சேர்த்தே 432 வருவாய் கிராமங்கள்தான் இருக்கின்றன. விளாத்திகுளம் வட்டம், நான்கில் ஒரு பகுதி வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். ஏறக்குறைய 1,26,000 ஹெக்டேர் நிலப்பரப்புப் பகுதியைக் கொண்டது. 2011 ஆம் ஆண்டு census கணக்கெடுப்பின்படி, 1,40,199 மக்கள்தொகை

2022 மார்ச் 22]

கொண்டதாகும். புதூர் ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சியாகவும் இருக்கின்றது, ஊராட்சி ஒன்றியமாகவும் இருக்கின்றது. இப்போது கணக்கெடுத்தால், ஏறக்குறைய இரண்டு இலட்சம் மக்கள்தொகை என்ற அளவில் விளாத்திகுளம் வட்டத்தில் இருக்கிறார்கள். 89 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய வட்டத்தில் ஒரே ஒரு Head Surveyor*–தான் இருக்கிறார், ஒரு தாசில்தார்தான் இருக்கிறார். 89 கிராம நிர்வாக அலுவலர்களை வருவாய் கிராமங்களையும் சமன் செய்து பார்த்து, அந்த மாவட்டத்தில் நான்கில் ஒரு பகுதியைக் கொண்டிருக்கிற வருவாய் கிராமத்தை இரண்டாகப் பிரித்து, புதூர் ஊராட்சி ஒன்றியத்தை வருவாய் வட்டமாக அமைக்க வேண்டும். ஏற்கெனவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், புதூரைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய் வட்டம் அமைக்க வேண்டும் என்ற உங்கள் கேள்விக்கு வந்து விடுங்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதியில் நின்றவர்; வென்றவர். வான் பொய்த்தாலும், தான் பொய்க்காத காவேரியினுடைய நலனைக் காக்க வேண்டும் என்று நேற்று அவை முன்னவர் அவர்கள் இங்கே எடுத்து வைத்ததை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள். அதைப்போல, வானம் பார்த்த பூமியாகவே இருக்கின்ற எங்கள் தொகுதி மக்களினுடைய வாழ்வாதாரத்தைக் கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய நல்லாட்சியில், புதூரை தனி வருவாய் வட்டமாகப் பிரித்துக் கொடுக்க ஆவன செய்திட வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாக வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை நான் புரிந்துகொள்கிறேன். ஏற்கெனவே நான் நின்று வெற்றி பெற்ற தொகுதி என்பதால், அந்தத் தொகுதியின் நிலவரம் எனக்குத் தெரியும். எனக்கு வந்த கணக்கின்படி புதூரைப்*

பொறுத்தளவுக்கு அங்கே பரப்பளவு சரியாக இருக்கிறது. ஆனால், மக்கள்தொகை குறைவாக இருப்பதாக எனக்கு கணக்கு சொல்லியிருக்கிறார்கள். சென்ற சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னிடம் இந்தக் கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அந்தக் கோரிக்கையை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி, ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். புதிய தாலுகாக்கள் வேண்டுமென்று ஏறத்தாழ 28 சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். R.D.O. அலுவலகம் வேண்டுமென்று 4 சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி ஆய்வு செய்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடர் நிறைவடைவதற்கு முன்பாக நிச்சயமாக, இதற்கு வேண்டிய நல்ல முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. G.V. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதூர் வட்டத்தை விளாத்திகுளம் வட்டத்திலிருந்து பிரித்து, தனி வட்டமாக அமைத்துக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு விளாத்திகுளம் தொகுதி வாக்காளப் பெருமக்களின் சார்பாகவும், அங்கிருக்கக்கூடிய வியாபாரப் பெருங்குடி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய, நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய எல்லாம் வல்ல நாயகன் தளபதி அவர்களுடைய ஆட்சியில் புதூர் வட்டம் தனியாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டால், அந்தப் பகுதி மக்கள் என்றென்றும் நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரியப்படுத்தி, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 மார்ச் 22]

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவருக்கு மட்டுமல்ல, நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதிகளில் புதிதாக தாலுகா அலுவலகங்கள், R.D.O. அலுவலகங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, தகுதிக்கேற்றாற்போல் நிச்சயமாக நல்ல முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இரு பெரும் தெய்வங்களை வணங்குகிறேன். கடந்த அம்மா ஆட்சியில் எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் எனது வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆனைமலை பகுதியை பொள்ளாச்சி வருவாய் வட்டத்திலிருந்து பிரித்து, ஆனைமலையை புதிய வருவாய் வட்டமாக 12–12–2018 அன்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல், புதிய கட்டடத்தையும் வழங்கினார்கள். அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 5 மாதங்களாகின்றன. அந்தக் கட்டடம் இன்னும் மக்கள் பயன்பாட்டுக்கு வரவில்லை. அது எப்போது மக்கள் பயன்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். கொரோனா காலமாக இருந்ததால், புதிதாகக் கட்டப்பட்ட கட்டடங்கள் திறக்கப்படாமல் இருந்திருக்கும். எனவே, அவற்றை உடனடியாகத் திறப்பதற்குண்டான வேலைகளை நிச்சயமாக இந்த அரசு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி கடந்த 2011 ஆம் ஆண்டு தொகுதி மறுசீரமைப்புக்குப் பிறகு புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதி. இந்த சட்டமன்றத் தொகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் தனியாக இல்லை. கடலூர் மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்றத் தொகுதிகளுக்கு 10 வட்டங்கள் உள்ளன. இந்தப் பகுதியில் 3,25,000 மக்கள் வசித்து வருகிறார்கள். மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' நிகழ்ச்சிக்கு வருகை தந்தபோது, விருத்தாசலத்தைத் தனி மாவட்டமாக அறிவித்துவிட்டு வந்தார்கள். அப்படி அந்த மாவட்டம் தனியாக அமைக்கப்படும்போது, நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்கென்று, நெய்வேலி வட்டாட்சியர் அலுவலகம் தனியாக அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தனி மாவட்டம் குறித்து அறிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக, சட்ட மன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளையெல்லாம் நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம். நான் ஓர் அமைச்சராக இருந்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர்தான். அவரவர்களுடைய பகுதியில் தாலுகா அலுவலகம் அமைய வேண்டுமென்பது அப்பகுதி மக்களுடைய கோரிக்கை. ஒரு காலத்தில் தாலுகா அலுவலகத்திற்குப் போகக்கூடிய பணிகள் குறைவாக இருந்தன. தற்போது தாலுகா அலுவலகங்களுக்குப் போகவேண்டிய காரணங்கள் நிறைய இருக்கிறபடியால், அந்தந்தப் பகுதிகளில் சிறிய வட்டத்திற்குள்ளாக, தாலுகா அலுவலகங்கள் அமைக்கப்பெற்றால்தான், பொதுமக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்யமுடியும் என்பதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய அரசு எண்ணியிருக்கிறது. இதுகுறித்து, நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே

2022 மார்ச் 22]

இதுசம்பந்தமாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவையெல்லாம் ஆய்வில் இருக்கின்றன. அந்த ஆய்வுகளின் முடிவுகள் வரும்போது, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடருக்குள்ளாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நல்ல முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்குட்பட்ட பெண்ணாகரம் வட்டம் ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட பழமையான வட்டம். பரந்த நிலப்பரப்பு, மக்கள்தொகை அதிகம் கொண்ட பகுதி. காடு, மலைகள், மேடுகள் நிறைந்த பகுதி. பெண்ணாகரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவேண்டுமென்றால் 40, 50 கிலோ மீட்டருக்குமேல் கடந்து வரவேண்டியிருக்கிறது. நீண்டநாள் கோரிக்கை என்ற அடிப்படையில், பொதுமக்களின் நலன் கருதி, ஒன்றியத் தலைநகராக இருக்கிற ஏரியூரை மையமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய அருமை அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள், காலையில் என்னிடம் தொலைபேசியில் சொன்னவுடனேயே, இதனை CRA–க்கு தொலைபேசியில் சொல்லி, அதிகாரிகளை அனுப்பி இது குறித்து ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறேன். உங்களுக்கு விரைவில் நிச்சயம் நல்ல தகவல் தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*